செ.வெ.எண்.386/2021 நாள்.10.09.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் வருகின்ற 12.09.2021 அன்று நடைபெறுவதையொட்டி திருப்பத்தூர் நுகர்பொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஏற்பாடுசெய்யப்பட்ட 15 மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் விழிப்புணர்வு வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் வருகின்ற 12.09.2021 அன்று நடைபெறுவதையொட்டி திருப்பத்தூர் நுகர்பொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஏற்பாடுசெய்யப்பட்ட 15 மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் விழிப்புணர்வு வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, ஆலங்காயம், மாதனூர், நாட்றம்பள்ளி, கந்திலி ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 100 ஊராட்சி மற்றும் நகரப்பகுதிகளில் இந்த 15 மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் விழிப்புணர்வு வாகனங்கள் சென்று பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்திகொள்வதையும் அதன் அவசியத்தையும் குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும். இந்த விழிப்புணர்வு வாகனங்கள் (10.09.2021) இன்று முதல் 12.09.2021 வரை 3 நாட்களும் பொது மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (பொறுப்பு) திரு.விஜயன், திருப்பத்தூர் நுகர்பொருன் விநியோகஸ்தர்கள் சங்கம் தலைவர் திரு.ஏ.செந்தில்முருகன், செயலாளர் திரு.ஏ.ரவிச்சந்திரன், பொருளாலர் திரு.எஸ்.சூரியகுமார், தகவல் தொழில்நுட்ப பிரவு திரு.எம்.தயாநிதி மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம்.**